N. Asokan
Secretary & Senior Research Fellow

No.5. Kavignar Puduvai Sivam St
Venkata Nagar Extension
Pondicherry 605 011 INDIA
Ph: off: (413) 2213758, 2212443, 2211592
Mobile : 94432 21770
Res: (413) 2211710, 2212778
Fax:(413)2212338
e-mail:ashokmirra@gmail.com;motherssindia@gmail.com

*The Mother's Service Society*

2015 / 07 /01

# இந்தியர் வாழ்விலுள்ள முரண்பாடுகள்

இந்தியர்கள் வாழ்வில் நிறைய முரண்பாடுகள் உள்ளன. அந்த முரண்பாடுகள் சிலவற்றை தேர்ந்தெடுத்து அதற்கு பின்னாலுள்ள உண்மை என்ன என்று தெரிந்துகொள்ள ஒரு எண்ணம் தோன்றியது. அதன் விளைவுதான் இந்த சொற்பொழிவு.

1. **காந்திஜி அவர்களை தேசத்தின் தந்தை என்று அழைக்கிறோம். ஆனால் அவருடைய கொள்கைகளை அரசியலிலோ ,பொருளாதாரத்திலோ பின்பற்றுவதில்லை. இருந்தாலும் அவரை தேசத்தந்தை என்று அழைக்காமல் இருப்பதில்லை. அப்பட்சத்தில் ஏன் இந்த முரண்பாடு வருகிறது .**

தேசத்திற்கு விடுதலை வாங்கிக் கொடுத்தவர் என்ற முறையில் அவரை தேசத்தந்தை என்று நாம் எல்லோரும் அழைக்கிறோம். இவ்விஷயத்திலுள்ள உண்மையை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால், அவருக்குக் காட்டும் நன்றி விசுவாசமாக அவருடைய கொள்கைகளை அரசியலிலும் பொருளாதாரத்திலும் பின்பற்ற வேண்டும் என்று பேசும்போதுதான் பிரச்சனை எழுகிறது. ஆங்கிலேயனை வெளியேற்ற அவருடைய சத்தியாகிரகமும், ஒத்துழையாமை இயக்கமும் உதவின. ஆனால் ஆங்கிலேயனை வெளியேற்ற முயற்சி செய்து கொண்டிருக்கும் பொழுதே உருவான மற்ற சில சூழ்நிலைகள் மிகவும் மாறுபட்டு போனதால், அவருடைய சத்தியாகிரகத்தையோ, ஒத்துழையாமை இயக்கத்தையோ அரசாலும், நாட்டு மக்களாலும் பின்பற்ற முடியவில்லை. உதாரணமாக இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தபோது, ஜப்பானிய படைகள் பர்மாவிற்குள் நுழைந்து விட்டன. பர்மா நாட்டை வென்றபின் இந்தியாவிற்குள் நுழைவார்கள் என்ற அபாயம் ஏறபட்டது. அப்போது காந்திஜி அவர்கள் ஜப்பானிய வீரர்கள் அப்படி நுழைந்தாலும் ஆயுதம் தாங்கி நாம் அவர்களை எதிர்க்கக் கூடாது. அஹிம்சா முறையில் அவர்களை நாம் எதிர்கொள்ள வேண்டும் என்று பேசினார். இதை நேருஜி, மற்றும் பட்டேல் போன்றவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. அவர்களே ஒத்துக் கொள்ளாதபோது ஆங்கில அரசாங்கம் எப்படி ஒத்துக் கொள்ளும்? இந்திய ராணுவம் ஜப்பானிய சேனைகளை மணிப்பூரிலுள்ள இம்பால் நகரிலும், நாகாலந்திலுள்ள கொஹிமா நகரிலும் எதிர்க்கொண்டு தாக்கி முறியடித்து விரட்டின. அம்மாதிரி எதிர்த்து தாக்கி இருக்காவிட்டால், ஜப்பானியர்கள் இந்தியாவின் வடகிழக்கு மாகாணங்களை ஆக்கிரமித்து இருப்பார்கள். இம்மாதிரி காந்திஜியின் கருத்துகளை அமல்படுத்த முடியாத சூழ்நிலைகள் பல எழுந்துள்ளன.

இந்தியா சுதந்திரம் அடைந்தபின்னும் ஹைதராபாத் சமஸ்தானத்தை ஆட்சி செய்து கொண்டிருந்த நிஜாம் அவர்கள் இந்தியாவுடன் ஒன்று சேர மறுத்தார். தனி நாடாக இருக்கப்போவதாக அறிவித்தார். இந்தியாவின் உள்துறை அமைச்சராக இருந்த பட்டேல் அவர்களுக்கோ காந்திஜியை போன்ற ஒரு பொறுமை இல்லை. அவர் உடனேயே ரிசல்ட் காட்ட விரும்பினார். அதனால், இந்திய ராணுவத்தை அங்கு அனுப்பி நிஜாமைப் பணிய வைத்தார். இம்மாதிரி வன்முறையை பயன்படுத்தியே ஆக வேண்டும் என்றொரு கட்டாயம் கோவாவை இந்தியாவுடன் இணைக்க வேண்டும் என்ற ஒரு அவசியம் வந்தபோது ஏற்பட்டது. காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்திற்குக் கட்டுப்பட்டு ஆங்கில அரசு 1947-இல் நாட்டைவிட்டு வெளியேறியது. அதைத் தொடர்ந்து இந்திய அரசு கேட்டுக்கொண்டதின் பேரில் பிரெஞ்சு அரசும் தன்னுடைய ஆட்சியின்கீழ் இருந்த புதுச்சேரியை தானே முன்வந்து கொடுத்துவிட்டுப் போய்விட்டது. ஆனால் போர்ச்சுகீசிய அரசும் தானாக இவ்வாறு வெளியேற முன்வரவில்லை. கோவாவை விட்டுக் கொடுக்கவே மாட்டோம் என்ன ஆனாலும் சரி என்றொரு பிடிவாதமான முடிவிலிருந்தனர். 1947-62 வரை இந்திய அரசு எத்தனையோ முறை கேட்டுக்கொண்டபோதும் போர்ச்சுகீசிய அரசோ சம்மதிக்கவில்லை. இதற்கு மேலும் பொறுக்க முடியாது என்ற நிலை எழுந்தபோதுதான் இந்தியா ராணுவத்தை அனுப்பி, வலுக்கட்டாயமாக போர்ச்சுகீசிய

ராணுவத்தை வெளியேற்றியது. காந்திஜி இங்கிலாந்தை ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் எதிர்த்து வெற்றி கண்டார் என்பதில் பல விசேஷங்கள் இருக்கிறன்றன.

முதலாவதாக இங்கிலாந்து ஒரு ஜனநாயக நாடு. சட்டத்தை மதிக்கின்ற ஒரு நாடு. இதே நம் நாட்டை ஆட்சி செய்தது இங்கிலாந்தாக இல்லாமல் ஜெர்மனியாக இருந்திருந்தால், நடக்கின்ற விஷயமே வேறு. ஹிட்லர் போன்ற சர்வாதிகாரிகள் காந்திஜியின் எதிர்ப்பை சட்டப் பூர்வமாகவே எதிர்கொண்டிருக்கமாட்டார்கள். அவரை உடனடியாக கைது செய்து, தூக்கில் போட்டிருப்பார்கள் அல்லது ராணுவ firing squad-ஆல் சுட்டிருப்பார்கள். ஆங்கிலேயன் பெருந்தன்மையானவன் என்பதால்தான் அவரை தூக்கில் போடாமலும், சுட்டு வீழ்த்தாமலும் அமைதியாக சிறையில் தள்ளினான். சிறை வாசம் முடிந்து வெளியே வந்தபின் அவர் மீண்டும் தன்னுடைய ஒத்துழையாமை இயக்க எதிர்ப்பை தொடர்ந்து வெளிக்காட்டிக் கொண்டிருந்தார். இம்மாதிரி பல சமயங்களில் காந்திஜி அவர்களுடைய அரசியல் கருத்துகள் நாட்டின் பாதுகாப்பிற்கு ஒத்துவராமலேயே இருந்திருக்கிறது. இந்தியா சுதந்திரம் அடைந்தபின் அதற்கு இராணுவமே தேவையில்லை. நாம் நிராயுதபாணியாகவே இருக்கலாம் என்றொரு கருத்தைத் தெரிவித்தார். காங்கிரஸ் கட்சி முழுவதுமே இதனால் அதிர்ந்துப் போனார்கள். பாகிஸ்தான் ராணுவம் வைத்துக் கொள்ளாதபட்சத்தில் நாமும் வைத்துக் கொள்ள வேண்டாம் என்று சொன்னால் ஒருவேளை காங்கிரஸார் கேட்டுக் கொண்டிருப்பார்கள். ஆனால் பாகிஸ்தான் ராணுவத்தை வைத்துக் கொள்ள முடிவு செய்தபட்சத்தில் இந்தியாவிற்கு அது தேவையில்லை என்று சொன்னால் யார்தான் ஒத்துக்கொள்வார்கள். தன்னுடைய முடிவை காங்கிரஸ் அரசியல் கூட்டத்தில் ஒரு தீர்மானமாக கொண்டுவர முயற்சி செய்தபோது எல்லா காங்கிரஸாரும் ஒன்று சேர்ந்து ஏக மனதாக இந்த தீர்மானத்தை முறியடித்தார்கள். இப்படி நாட்டின் பாதுகாப்பிற்கு ஒத்துவராத கருத்துக்களை காந்திஜி வலியுறுத்தியதால்தான், தேசதந்தை என்று அவரை ஒருபுறம் ஏற்றுக் கொண்டாலும், மற்றொருபுறம் அவர் காட்டிய வழியை எவரும் பின்பற்றவில்லை.

அவருடைய அரசியல் கருத்துகள் நாட்டிற்கு எந்தளவிற்கு ஒத்துவரவில்லையோ, அந்தளவிற்கு அவருடைய பொருளாதார கருத்துகளும் நாட்டின் தேவைகளுக்கு ஒத்துவராமல் போய்விட்டன. அவர் எளிமையான வாழ்க்கையைத்தான் ஆதரித்தார். வேட்டிதான் கட்டினார், பேண்ட் அணியவில்லை. பெரும் அரசியல் தலைவராக இருந்தபோதும்கூட அதற்கேற்ற வீடுகளில்லாமல் அரசியல் வேலையாக டெல்லிக்கு வந்தால், ஹரிசன சேரிகளில்தான் தங்குவார். சைவ உணவை வலியுறுத்தினார். கனரக தொழிற்சாலைகளை அவர் ஆதரிக்கவே இல்லை. கிராமபபுறங்களில் செய்கின்ற குடிசை தொழில்களைதான் அவர் ஆதரித்தார். இவையெல்லாம் நம் நாட்டு மக்களுக்கு ஒத்துவருமா என்றெல்லாம் அவர் சிந்திக்கவே இல்லை. அலுவலகங்களுக்கு செல்கின்றவர்கள் இக்காலக்கட்டத்தில் பேண்ட் அணிந்துதான் செல்கின்றனர். பண்டிகை மற்றும் விஷேச நாட்களில்தான் வேட்டி அணிகின்றனர். மேலும் காந்திஜிபோல் எளிமையான வாழ்க்கையை எவரும் வாழ விரும்புவதில்லை. நாட்டில் எல்லோரும் நிறைய சம்பாதித்து, வசதியான வீடு, கார், ஏ. சி. அறுசுவை விருந்து என்றுதான் வாழப்பிரியப்படுகிறார்கள். காந்திஜியோ எங்கு சென்றாலும் பாதயாத்திரையாகத்தான் செல்வார். ஆனால் நம் நாட்டில் மக்கள் இதற்கெல்லாம் ஒத்துக் கொள்வார்களா? வீதிகளில் வாகனங்கள் நிரம்பி வழிகின்றன. ஸ்கூட்டர், கார் லோன் என்று மக்கள் லோன்போட்டு வாகனங்களை வாங்குகிறார்கள். இப்படி மக்கள் வசதியை நாடும்போது காந்திஜி அவர்கள் வலியுறுத்திய எளிமையான வாழ்க்கை எப்படி மக்களுக்கு ஏற்புடையதாக இருக்கும்.

காலத்திற்கு ஒத்துவராத கொள்கைகளையும், கருத்துகளையும் காந்திஜி அவர்கள் வலியுறுத்தியதால்தான், அரசும் சரி, மக்களும் சரி அவர் காட்டிய வழியில் நடக்காமல் தவறிவிட்டார்கள். ஆனால் தேசத்திற்கு விடுதலை வாங்கிக் கொடுத்தது அவர்தான் என்பது மறுக்க முடியாத உண்மையாக இருப்பதால், இதுவரை அந்தளவிற்காவது நன்றியறிதலோடு நடந்து கொள்கிறார்கள்.

2. **அரசாங்கத்தில் ஊழல் மலிந்துள்ளதாக மக்கள் குறை சொல்லும்போது அதே ஊழலை அதிகமாக செய்யும் அரசியல் கட்சிகளையே ஏன் மீண்டும் மீண்டும் தேர்தலில் தேர்ந்த்தேடுக்கிறார்கள்?**

இந்த முரண்பாடு வாழ்வில் நல்லதும் கெட்டதும் சேர்ந்துவரும் என்பதற்கு நிரூபணமாகிறது. ஒன்றின்மூலம் வரும் நல்லதை மனதில் வைத்துக் கொண்டு நாம் ஏற்றுக் கொள்ளும் பொழுது அதோடு வரும் கெட்டதைத் தவிர்க்க முடியாமல் போய்விடுகிறது. இது வாழ்வில் எல்லா இடங்களிலும் வரும். நாட்டை நிர்வாகம் செய்ய அரசாங்கம் தேவைப்படுகிறது என்னும்பொழுது அரசாங்கம் வேண்டும் என்கிறோம். அதேசமயத்தில் அரசாங்கம் செய்ய வருபவர்கள் ஊழலில் ஈடுபடும்பொழுது தாங்க முடியவில்லை என்றும் மக்கள் புலம்புகிறார்கள். இதற்கு நல்ல உதாரணம் வேண்டும் என்றால் திருமணத்தையும், பெண்களையும் எடுத்துக் கொள்ளலாம். திருமணத்தை நாடாத பெண்களே இந்தியாவிலில்லை. அதேசமயத்தில் அதனால் தன் மகிழ்ச்சிக் குறைந்தது என்று குறை கூறாத பெண்களே இல்லை. திருமணத்தால் தன் மகிழ்ச்சியை தொலைத்து விட்டதாகக் கூறும் பெண்மணிகள் தான் பெற்ற பெண் திருமண வயதை எட்டும்போது

காலாகாலத்தில் அந்த திருமணத்தை முடித்து வைக்க வேண்டும் என்று துடிக்கிறார்கள். உங்கள் சந்தோஷம்தான் திருமணத்தால் கெட்டது என்று சொல்கிறீர்களே பின் ஏன் அந்த தவற்றை உங்கள் பெண் வாழ்க்கையில் செய்கிறீர்கள் அவளை சுதந்திரமாக இருக்க விடுங்களேன் என்றால், அதெல்லாம் பார்த்தால் முடியுமா நல்லதோ, கெட்டதோ அவளுக்கென்று ஒரு ஆண் துணை வேண்டும் அவள் ஒருவருக்கு சொந்தம் என்று தெரியும்போதுதான் மற்ற ஆண்கள் அவளை தொந்தரவு செய்யாமல் இருப்பார்கள். அவள் தனித்திருக்கிறாள் என்று தெரிந்தால், அக்கம் பக்கத்து ஆண்களின் தொல்லை தாங்காது என்று பதில் சொல்லி சமாளிப்பார்கள். ஆக இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? திருமணத்தின் வாயிலாக பலவிதமான தொல்லைகள் வந்தாலும், ஆணின் பாதுகாப்பு பெண்ணிற்கு பெரிதாகத் தெரிவதால், அவள் எந்தவிதமான தொந்தரவையும் பொறுத்துக்கொள்ள தயாராக இருக்கிறாள் என்று தெரிகிறது.

இம்மாதிரி நிலையில்தான் நாம் அரசையும், மக்களையும் வைத்துப் பார்க்க வேண்டும். நிர்வாகத்திற்காக அரசாங்கத்தை நாடும்பொழுது வேண்டாவெறுப்பாக அதனுடன் ஊழலும் வந்துவிடுகிறது. இரண்டாவதாக நாம் வேறொன்றையும் கருத வேண்டும். அரசாங்க அதிகாரிகளுக்குக் காசு கொடுத்து தம் தவறான நோக்கத்தை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் பலபேருக்கு இருக்கிறது. எத்தனையோ பேருக்கு வருமானவரி, வணிக வரி கொடுக்க இஷ்டமே இல்லை. கட்டிட விதிகளை மீறி வீடு கட்டிக்கொள்ள எத்தனையோ பேர்கள் ஆசைப்படுகின்றனர். பள்ளி, ம்ருத்துவமனை, தொழிற்சாலை முதலியவைகளை நடத்துபவர்கள் இவர்களுக்கு எல்லாம் விதிமுறைகளை மீறி செயல்பட்டு ஆதாயம் பார்க்க நிறைய சந்தர்ப்பங்கள் வருகிறது. அவ்வாறு கிடைக்கும் ஆதாயத்தை விட மனம் இல்லாதபட்சத்தில் அரசாங்க அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் இருக்க செய்வதற்கு இவர்கள் காசு கொடுப்பதை வழக்கமாகச செய்கிறார்கள். இப்படி குறுக்கு வழியில் ஆதாயம் தேடுபவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், முறையாக வாழ விரும்புவர்களைவிட இவர்கள்தான் அதிகமாக இருப்பார்கள். இப்படிப்பட்'டவர்களுக்கு அரசாங்க அதிகாரிகளோ, அல்லது அரசியல்வாதிகளோ செய்யும் ஊழல் வேலைகள் தவறாகவே கண்ணிற்குத் தெரியாது. ஊழல் செய்யும் அரசியல்வாதிகள் இவர்கள் கண்ணிற்கு பெரிய சாதனையாளர்களாகத்தான் தெரிவார்கள். இந்த உண்மையை வைத்துப் பார்க்கும்பொழுது ஊழல் செய்யும் கட்சிகளுக்கு அதிகமாக ஓட்டு விழுவது என்பது மக்களிடையே அவர்களுக்கு கிடைத்த அங்கீகாரத்தையும் காட்டுகிறது என்று நாம் அறியலாம்.

மூன்றாவதாக நம் நாடு வறுமையிலிருந்து மீண்டு வளர்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் நாடு என்பதை நாம் உணர வேண்டும். மக்களுடைய ஆசைகளும், தேவைகளும் கட்டுக்கடங்காமல் பெருகிவிட்டன. இருபதாயிரம் வருமானம் பார்க்கக் கூடிய ஒருவருக்கு 50,000/-க்குமேல் வருமானம் பார்க்கக்கூடிய ஒருவர் வாழும் வாழ்வை தானும் வாழ வேண்டும் என்ற ஆசை வந்துவிடுகிறது. Two wheeler தான் வைத்துக் கொள்ள முடியும் என்ற நிலையில் உள்ளவர் கார் வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறார். வாரம் ஒரு நாள்தான் நல்ல அசைவ உணவு செய்ய முடியும் என்ற நிலையிலிருப்பவர் தினமும் தினமும் அதேபோல் அசைவ உணவு சாப்பிட பிரியப்படுவார். பிள்ளைகள் கேட்பதை எல்லாம் வாங்கி கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படாத பெற்றோர்களே இல்லை என்று சொல்லலாம். இதற்கெல்லாம் கிடைக்கின்ற வருமானம் வழி செய்யாதபட்சத்தில் கையிலிருக்கும் அரசாங்க அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி மேல்வரும்படி பார்க்க எத்தனையோ பேர் துணிந்து விடுகிறார்கள். ஆகவே வருமான பற்றாக்குறை என்பது ஊழலுக்கு மிகப் பெரிய தூண்டுகோலாக அமைந்துவிடுகிறது என்பதையும் நாம் கருத வேண்டும். சுபீட்சம் நிறைந்த அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் அரசாங்க ஊழியர்கள் இந்த அளவிற்கு ஊழலில் ஈடுபவதில்லை. ஏனென்றால் அவர்களுக்கு கை நிறைய வருமானம் கிடைப்பதால் அவர்களுக்கு ஊழலில் ஈடுபட அவசியம் இல்லாமல் போகிறது. பொதுமக்களும், பணப்பற்றாக் குறையினால் வரும் கஷ்டங்களை உணர்ந்தவர் என்பதால் அரசாங்க ஊழியர்கள் செய்கின்ற ஊழல்களை ஏற்புடையது என்றே விட்டுவிடுகிறார்கள்.

மேற்கூறிய கண்ணோட்டங்களை வைத்துப் பேசினாலும், ஒரு புதிய உண்மை இப்போது இந்திய அரசியலில் அறிமுகமாகிறது. ஊழலற்ற ஆட்சியை தருவோம் என்று வாக்குறுதிகளை அள்ளி வழங்குவது அரசியல் கட்சிகளுக்கு ஒன்றும் புதிதே அல்ல. அப்படி வாக்குறுதி வழங்கினாலும் ஆட்சிக்கு வந்து விட்ட பிறகு கொடுத்த வாக்கிற்கு எதிர்மாறாக நடந்து கொள்வதும் ஒன்றும் புதிதல்ல. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆம் ஆத்மி கட்சிக்கு டெல்லியில் கிடைத்துள்ள அமோக வரவேற்பு ஆச்சரியம் தருவதாக அமைந்துள்ளது. நாட்டின் தலைநகரில் மத்தியில் ஆட்சி செய்யும் ஆளுங்கட்சியை ஓரம் கட்டிவிட்டு 70 சீட்டு கொண்டுள்ள சட்டசபையில் 67 இடங்களை பிடித்திருப்பது என்பது மிகவும் பாராட்டக் கூடிய ஒரு விஷயம்தான். நடைமுறையில் இந்த ஆம் ஆத்மி கட்சியினர் தாம் சொல்லியபடி செய்கிறார்களா, ஆம் ஆத்மி கட்சி அமைக்கும் மந்திரி சபையில் இடம் பெற்றுள்ள மந்திரிகள் யாரும் ஊழலில் சிக்காமல் இருக்கிறார்களா என்பதையும் நாம் பார்க்க வேண்டும். அவர்கள் சொல்லியபடி செய்து தம் பெயரை காப்பாற்றிக் கொண்டார்கள் என்றால்

இந்திய அரசியல் வாழ்வில் அது ஒரு பெரிய திருப்பு முனையாக அமையும். டெல்லியில் இவர்களுக்கு கிடைத்த வரவேற்பு மற்ற மாநிலங்களிடமும் கிடைத்ததென்றால் அது நம் நாட்டின் தலையெழுத்தையே மாற்றிவிடும்.

3. **தமிழர்களும், வங்காளிகளும் மிகுந்த மதப்பற்றுடையவர்கள். கடவுள் நம்பிக்கைக் கொண்டவர்கள். அப்பட்சத்தில் இதே தமிழர்களும், வங்காளிகளும் கடவுளே இல்லை என்று நாத்திகம் பேசும் தி. மு. க விற்கும், கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் எப்படி ஓட்டுப் போட்டார்கள். இந்த முரண்பாடை எப்படி நாம் புரிந்த கொள்வது?**

தமிழர்களின் மத ஈடுபாடு மேலோட்டமானது என்று நாம் சொன்னால், 1967-இல் தி.மு.கவினர் நடத்திய நாத்திக பிரச்சாரம் தமிழர்களின் மதப்பற்றைக் கலைத்து, அவர்களை நாத்திகர்களாக மாற்றி, தி.மு.கவினருக்கு ஓட்டுப் போட வைத்தது என்று நாம் பேசலாம். ஆனால் இத்தகைய கூற்று உண்மையே இல்லை. ஏனென்றால், தமிழர்களின் மதப்பற்று மிகவும் ஆழமானது. அவர்களுடைய ஜீவனில் இரண்டறக்கலந்தது. 63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும் எழுந்தருளியுள்ள புண்ணிய பூமி இது.பல நாயன்மார்கள் நிகழ்த்தியுள்ள அற்புதங்களை படிக்கும்போது நமக்கு மெய் சிலிர்த்துப் போகிறது. இப்படி நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களோடு தமிழர்களின் ஆன்மிகம நிற்கவில்லை. இவர்களை பின்பற்றி பட்டினத்தார், வள்ளலார், ரமணர் போன்ற மகான்களும் அவதரித்துள்ளனர். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் பகவான் ஸ்ரீ அரவிந்தரும், அன்னையும் அவர்களுமே தமிழர்களிருக்கும் புதுச்சேரிக்குதான் வந்துள்ளார்கள். புதுச்சேரி பழங்காலத்தில் அகத்திய முனிவர் குடியிருந்து தவம் புரிந்த வேதபுரி என்றொரு நகரமாகக் கருதப்படுகிறது. ஆகவே ஆன்மிகம் இந்தளவிற்கு ஊறியிருக்கும் போது தி.மு.கவினரின் நாத்திகப் பிரச்சாரத்தால், இந்த மத ஈடுபாடு கெட்டது என்று நாம் சொல்வதற்கில்லை. அப்படியானால் தமிழர்கள் தி.மு.க.வினரை ஆதரித்தது எதைக் காட்டுகிறது என்றொரு கேள்வி எழுகிறது.

தி.மு.க. பிரச்சாரத்தில் பல அம்சங்கள் அடங்கியுள்ளன. அந்த பல அம்சங்களில் நாத்திகமும் ஒன்று. உண்மை என்னவென்றால், அந்த நாத்திகம் மக்களின் மனத்தைக் கவரவில்லை. மக்களை கவர்ந்தது என்னவென்றால், தி.மு.கவினர் அந்தணர் ஆதிக்கத்தைக் கண்டித்துப் பேசியதும், மத்திய அரசின் ஹிந்தி திணிப்பை எதிர்த்துப் பேசியதும்தான் ஆகும். இந்த இரண்டு விஷயத்திற்குதான் மக்களிடமிருந்து அவர்களுக்கு வரவேற்பு கிடைத்ததே தவிர கூடுதலாக வந்த நாத்திகத்தை அவர்கள் பொருட்படுத்தவில்லை. இதை ஏன் நான் கூறுகிறேன் என்றால். அவர்கள் ஆட்சியில் இருந்த காலத்தில்கூட கோவில்களில் பக்தர்களின் வருகையோ, உண்டியல் காணிக்கையோ, மதம் சம்பந்தப்பட்ட திருவிழாக்களோ எதுவுமே குறையவில்லை. தி.மு.க வினர்தான் நாத்திக பிரச்சாரம் செய்தார்களே தவிர தலைவர்களின் குடும்பத்தை சேர்ந்த பெண்கள் வழக்கம்போல கோயில்களுக்கு சென்றுகொண்டுதான் இருந்தனர். குடும்பத் தலைவர்களும் அதைத் தடுத்ததாகத் தெரியவில்லை. தமிழர்களின் மூடநம்பிக்கைகளை தி.மு.க தலைவர்கள் கேலி செய்ததுண்டு. குறிப்பாக தமிழர்கள் அதிகமாக நம்புகின்ற ராகு காலம், எமகண்டம் ஆகியவற்றை எள்ளி நகையாடியதுண்டு. இந்த மூடநம்பிக்கையை நாங்கள் மதிக்கவில்லை என்பதற்காகவே அண்ணா அவர்கள் 1967-இல் ராகு காலத்திலேயே முதலமைச்சர் பதவியை ஏற்றார். ஆனால் அண்ணா அவர்கள் அகால மரணம் அடைந்தபின் அதன்பின் பதவி ஏற்ற எந்த தி.மு.க அமைச்சரும் ராகு காலத்தில் பதவி ஏற்கவில்லை. வங்காளிகளை எடுத்துக் கொண்டால், அவர்கள் மதவழிபாட்டையும், அரசியலையும் நன்றாகப் பிரித்து வைத்துள்ளனர். ராமகிருஷ்ணர், சுவாமி விவகானந்தர் , பகவான் ஸ்ரீ அரவிந்தர் ஆகியோர்கள் பிறந்த மாநிலம் என்பதால், நிச்சயமாக ஆன்மிக ஈடுபாட்டை அம்மாநிலத்தவரால், இழக்கவே முடியாது. இருந்தாலும், கம்யூனிச கட்சியினருக்கு ஆட்சி உரிமை அளித்துள்ளனர் எனபதும் உண்மை. ஆனால் அதற்கு ஒரு முக்கியக் காரணம் இல்லாமல் இல்லை. கம்யூனிச கட்சியினர் ஆட்சி அமைத்தால், தொழிலாளர் வர்கத்தினருக்கு நல்வாழ்வு கிடைக்கும் என்று வங்காளிகள் பெரிதும் நம்பினர். கல்கத்தாவில் ஏராளமான சணல் தொழிற்சாலைகள் உள்ளன. அதனால் அம்மாநகரமே தொழிலாளர்கள் நிரம்பிய நகரமாக இருந்தது. மேலும் வங்காளிகள் மிகவும் உணர்ச்சிவயப்பட்டவர்கள். சுபீட்சத்தையடைய விரைவு வழி ஒன்றுள்ளது என்று தெரிந்தால், அந்த வழியை அவர்கள் உடனேயே நாடுவார்கள். நாடு முழுவதும் காந்திஜி அவர்களின் சத்தியாக்கிரகத்தைப் பின்பற்றும்போது வங்காளத்தில் மட்டும் நேத்தாஜி அவர்களின் ஆயுதம் தாங்கிய அணுகுமுறைக்கு பெரிய ஆதரவு இருந்தது. காரணம் என்னவென்றால, ஆயுதம் தாங்கி போரிட்டால் சீக்கிரம் விடுதலைப் பெறலாம் என்று அவர் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார். உணர்ச்சிவயப்பட்ட வங்காளிகளுக்கு ஆயுதம் ஏந்தினால் சீக்கிரம் விடுதலைக் கிடைக்கும் என்று என்னும் பொழுது அவர்கள் ஆதரவு நேத்தாஜிக்கு பெருமளவில் கிடைத்தது. இதே ரீதியில்தான் கம்யூனிஸ்ட்கள் ஆட்சிக்கு வந்தால், உழைப்பாளிகள் விரைவில் உயர்வு பெறுவார்கள் என்று கம்யூனிச தலைவர்கள் செய்த பிரச்சாரம் வங்காளிகள் மனதைத் தொட்டது.

அதேசமத்தில்  எந்த கம்யூனிச தலைவரும் வங்காளிகளின் மத ஈடுபாட்டை நேரடியாகத் தாக்கிப் பேசவே இல்லை. தமிழ் நாட்டிலாவது திராவிட கழகத்தினர் சிலை வழிபாட்டினை அவமதித்துப் பேசினார்கள். ஆனால் வங்காளத்தில் நவராத்திரி வழிபாடுகள் ஒரு வாரத்திற்குமேல் விமர்சியாக நடக்கும். துர்கா பூஜா என்று துர்க்கை அம்மன் சிலையை அலங்கரித்து, வீதிவீதியாக ஊர்வலம் எடுத்துச் செல்வார்கள். இதையெல்லாம் எந்த கம்யூனிச தலைவரும் கண்டித்ததேயில்லை. ஆகவே வங்காளிகள் ஆன்மிகத்தையும், அரசியலையும் அறவே பிரித்து வைத்ததால் மத ஈடுபாடு கொண்ட வங்காளிகள் நாத்திகத்தை வலியுறுத்தும் கம்யூனிஸ்ட்களை ஆட்சி அமைக்க அனுமதித்ததில் ஆச்சரியமே இல்லை. மேலும் ஒன்றையும் நாம் கருத வேண்டும். ஆன்மிகத்தினுடைய சிறந்த அடையாளமே ஐக்கிய உணர்வுதான். காங்கிரஸ் கட்சிக்காரர்களும் தி.மு.க. வினரும் எலியும், பூனையும் போல விரோதிகளாக நடந்து கொண்டாலும் அந்த விரோதத்தை மீறி அவர்களிடையே ஒரு ஒற்றுமையை பாராட்டுவது ஆழத்தில் ஆன்மிகம் நன்றாக வேரூன்றி இருப்பதை காட்டுகிறது. இதற்கு சிறந்த நிரூபணம் வேண்டும் என்றால் இந்திராகாந்தி அம்மையார் 1975-ஆம் ஆண்டு நாட்டில் எமர்ஜென்சியை கொண்டு வந்த பொழுது கருணாநிதி அவர்களை தொடர்பு கொண்டு பெருந்தலைவர் காமராஜர் அவர்களை கைது செய்ய சொன்னார். காங்கிரஸ் ஆட்சியை கவிழ்த்தது தி.மு.க தான் என்றாலும்  காமராஜர் மேல் மக்கள் வைத்திருந்த மரியாதையை கருணாநிதி அவர்கள் நன்கு அறிவார். ஆகவே அவரை கைது செய்வது தமிழருக்கே ஒரு பெரிய அவமானம் என்று முடிவு செய்து மத்திய அரசை எதிர்த்துக் கொண்டாலும் பரவாயில்லை. தான் இந்த காரியத்தை செய்ய மாட்டேன் என்று மறுத்துவிட்டார். இப்படி எதிர்கட்சியின் தலைவரிடத்தில் தி.மு.க தலைவர் அவர்கள் காட்டிய ஒரு ஒற்றுமை மாநிலத்தில் உள்ள ஆன்மிகத்தின் தீவிரத்தைக் குறிக்கிறது. அடுத்தபடியாக பெரியார் அவர்கள் மூதறிஞர் ராஜாஜியை அரசியல் ரீதியாக எதிரியாகவே பாவித்து நடத்தினார். இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அவருக்கு ஒரு சிக்கலான பிரச்சனை விஷயத்தில் சரியான அறிவுரை தேவைப்பட்டது அவர் விரும்பி இருந்தால் சட்ட வல்லுனர்களையும், வழக்கறிஞர்களையும் சந்தித்து அறிவுரை கேட்டிருக்கலாம். ஆனால் அவர் அப்படி செய்யவில்லை. அவர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. இந்த அறிவுரையை வழங்குவதற்கு சரியான நபர் ராஜாஜி அவர்கள் தான் என்று முடிவு செய்து அவரை சந்தித்து அறிவுரை கேட்டுக் கொண்டார். இதில் ஆச்சரியம் என்னவென்றால் ராஜாஜி அவர்கள் தமிழ்நாட்டில் குல கல்வி திட்டத்தை அறிமுகப்படுத்திய பொழுது ஜாதியை வலுப்படுத்துவதற்காக ராஜாஜி அவர்கள் திட்டமிட்டு செய்யும் செயல் இது. ஆகவே இதை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் செய்து, அதன் விளைவாக ராஜாஜி அவர்கள் பதவியை இழக்க நேரிட்டது. இப்படி அடுத்தவர் ஆட்சியை கவிழ்த்துவிட்டு அவரிடமே அந்தரங்கமான விஷயங்களை பேசி அறிவுரை கேட்பது என்பது ஆழத்தில் ஆன்மிக ஐக்கியத்தை உணர்ந்தவர்கள் மட்டுமே செய்யமுடியும்.

4. **இந்நாட்டில் மகாசரஸ்வதி, மகாகாளி, மகாலக்ஷ்மி என்று பெண் தெய்வங்களை வழிபடும் பழக்கமுள்ளது. ஆனால் நடைமுறையில் பெண்ணாகப் பிறந்தவர்களை மட்டமாக நடத்தும் பழக்கமுள்ளது. இந்த முரண்பாடை எப்படி நாம் புரிந்துகொள்வது?**

நம் நாட்டில் போலியாக, ஒப்புக்காக எத்தனையோ வேலைகளை செய்கின்றோம். அதில் இதுவும் ஒன்று என்று வைத்துக் கொள்ள வேண்டும். ஒருபக்கம் ஆன்மிகம் நிறைந்த நாடு என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகின்றோம். ஆனால் தெய்வங்கள் முற்றும் ஏற்றுக் கொள்ளாத வகையில் பொய, ஏமாற்று வேலை, ஊழல், அசுத்தம், பொய்சாட்சி சொல்வது என்று எத்தனையோ கெட்ட வழக்கங்களை வெட்கமில்லாமல் கடைபிடிக்கிறோம். கறுப்புப்பணத்தை எடுத்துச் சென்று கோவில் உண்டியலில் தெய்வத்திற்குக் காணிக்கையாக செலுத்தி ஆண்டவனின் அருள் கிடைத்ததற்கு நன்றி தெரிவிக்கும் பக்தர்களும் இந்நாட்டில் உண்டு. இப்படி ஆன்மிகத்திற்கு ஒத்துவராத காரியங்களை செய்துகொண்டு அதேசமயத்தில் தெய்வ பக்தியை வெளிப்படுத்திக் கொள்வது முரண்பாடாக இருப்பதாக எவரும் உணர்வதில்லை. பசுவையே தெய்வமாக வழிப்படும் பழக்கமும் நம் நாட்டிலுண்டு. ஆனால் அதையாவது நன்றாக வைத்திருக்கிறோமா என்று பார்த்தால் அதுவுமில்லை. கிராமப்புரங்களில் வீடுகளில் உள்ள பசுக்கள் பெரும்பாலானவைகள் மெலிந்துதான் காணப்படுகின்றன. அது ஈன்றெடுக்கும் கன்றுக்குட்டி பெண் கன்றாக இருந்தால் அதற்கு ஏதோ பால் கிடைக்கும். அது காளை கன்றாக அமைந்துவிட்டால், அதற்கு சரிவர பால் கொடுப்பதே இல்லை. அது நாளாவட்டத்தில் பட்டினி கிடந்து உயிர்விடுகிறது. பசுவிற்கு வயதாகி இனிமேல் குட்டிப் போடாது பால் சுரக்காது என்ற நிலை வந்துவிட்டால், இத்தனை நாட்கள் பால் கொடுத்ததற்காகவாவது அதனுடைய மீதி வாழ்நாளை நல்லபடியாகக் கழித்து,  உயிரைவிட மாட்டின் சொந்தக்காரர் வழி செய்ய வேண்டும். ஆனால், பெரும்பாலானவர்கள் இதைக்கூட செய்வதில்லை. அது வயதாகிவிட்டது என்று தெரிந்தாலே சந்தைக்கு ஓட்டிச சென்று நூறோ, இருநூறோ கிடைத்தால் போதும் என்று விற்றுவிடுகிறார்கள். அதை வாங்கிப் போகிறவன் கறி கடைக்குத்தான் எடுத்துச் செல்கிறான். பசுவை தெய்வமாக வழிபடுவோர், அதன் கடைசி காலத்தில் அதை சரிவரவும் பராமரிக்கவும் மாட்டோம் என்று சொல்லும் நம் நாட்டு மக்களை எப்படி புரிந்து கொள்வது? பெண் தெய்வங்களை வழிபடும் நம் நாட்டில் பெண்களுக்குரிய மரியாதை கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஆனால் அப்படி இல்லாமல் அது தலைகீழாக உள்ளது. இங்கேதான் நமது முன்னோர்கள் பெரும் தவறு செய்துவிட்டனர். அதாவது நம் நாட்டு பெண்கள் சமுதாயத்திடம் கணவனே கண்கண்ட தெய்வம், கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன், பதி பரமேஷ்வர் என்றொரு கலாச்சாரத்தைக் பெண்களுக்குக் கற்றுக் கொடுத்துவிட்டார்கள். பெண்களுக்கு படிப்பறிவு குறைந்த அக்காலத்தில் இப்படி சொன்னது அவர்கள் ஆண்களை தெய்வமாக வழிபட சொன்னது போலாகிவிட்டது. அதேசமயத்தில் நாம் ஆண்களின் நிலையையும் பார்க்க வேண்டும். உண்மையிலேயே தெய்வாம்சம் நிரம்பிய ஒரு ஆண்மகனை தெய்வமாக மனைவி வழிபடும் பட்சத்தில் தவறு ஏதும் வராது. இந்த ஆன்மாவின் தெய்வீக அம்சம் உண்மையில் வெளிப்படும் பொழுது அவன் மனைவியும், அவள் பெறும் பிள்ளைகளும் சீரும், சிறப்புமாக இருப்பார்கள். ஆனால் அதேசமயத்தில் எந்த சிறப்பும் இல்லாத ஒரு சாதாரண ஆண்மகனை மனைவி தெய்வத்திற்கு சமமாக நடத்தினால், அந்த தகுதிக்கு மீறிய மரியாதை அவனுடைய அகம்பாவத்தை அளவிற்குமீறி வளர்த்து அவனிடம் மறைந்திருந்த அசுர குணங்களைதான் வெளிக்கொணரும். ஒரு வேலைக்காரனை முதலாளி அளவிற்குமீறி மரியாதையாக நடத்தினால், அவனுக்குக் கிடைக்கும் மரியாதை அவனை நிதானம் இழக்கச் செய்யும். இத்தனை நாட்கள் மரியாதையாக நடந்து கொண்டிருந்தவன் இன்று முதலாளியை விரட்டவும் துணிவான். அவரை பேர் சொல்லிக் கூப்பிடுவான. அவருக்கு எதிரே கால்மீது கால்போட்டு அமர்வான். அவரையே எடுபிடி வேலைகளையும் செய்யச் சொல்வான். அதாவது இதுவரை அவர் நினைத்துப் பார்க்காத விஷயங்களை எல்லாம் அவர் கண்முன்னே நிகழ்த்திவிடுவான். இதற்கு ஒரேவழி அவனுக்குக் கொடுத்த புதுமரியாதையை நிறுத்தி, அவனை பழைய நிலைக்கு இறக்குவதுதான்.

நம் நாட்டு பெண்கள் ஆண்கள் விஷயத்தில் இந்த தவறுதான் செய்துள்ளார்கள். எந்த சிறப்புமில்லாத ஆண்களை தெய்வ நிலைக்கு உயர்த்தி வைத்தபோது அவர்கள் அகம்பாவம் அசுர வேகத்தில் வளர்ந்து பெண்களை அடிமட்டமாக நடத்த ஆரம்பித்து விட்டார்கள். விளைவு என்னவாயிற்று? பெண்களுக்கு சொத்துரிமை போயிற்று. கேள்வி கேட்கும் உரிமையும் போயிற்று. ஆண் தறுதலையாக சுற்றி திரிந்தாலும், அவன் வீட்டிற்கு வந்துவிட்டான் என்றால், எந்த கேள்வியும் கேட்காமல் அவனுக்கு வேண்டிய பணிவிடைகளை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த பணிவை மேலும் வலுப்படுத்த அவன் சாப்பிட்ட சாப்பாட்டில் மீதியை இவள் சாப்பிட வேண்டும். அதுவும் அவன் எவ்வளவு நேரம் கழித்து வந்தாலும், அதுவரையில் தான் சாப்பிடாமல் காத்திருந்து கணவருக்கு உணவு பரிமாறிவிட்டுதான் தான் உண்ண வேண்டும் என்றொரு பழக்கமும் இருக்கிறது. இப்படி எல்லாம் பெண்களை அடிமைப்படுத்தியதால், ஒரு பக்கம் பெண் தெய்வங்களை வழிபட்டு கொண்டும், மற்றொரு பக்கம் பெண்களை கொடுமைப்படுத்திக் கொண்டும் ஆண்கள் நடந்து கொள்வதில் ஆச்சரியமேயில்லை. பெண்களை சிறுமைப்படுத்துவதுதான் இந்நாட்டு ஆண்களின் வழக்கம் என்றாலும், அபூர்வமாக சில சந்தர்ப்பங்களில் பெண்கள் மிக உயர்ந்த பதவிகளுக்கு வருவதுமுண்டு. அப்படிப்பட்ட சமயங்களில் இந்நாட்டு ஆண்களே இப்படி உயர்பதவியில் இருக்கும் பெண்களுக்கு பலத்த மரியாதை செய்கின்றனர். ஆனால் இப்படிப்பட்ட உயர்ந்த பதவிகள் ஏற்கனவே உயர்ந்த அந்தஸ்திலுள்ள பெண்களுக்குத்தான் கிடைக்கிறது. இந்திராகாந்தி அவர்கள் இந்நாட்டின் பிரதமர் ஆனார் என்றால், அவர் நேருஜியின் மகளாக இருந்தது ஒரு முக்கியக்காரணம் ஆகும். அம்மாதிரியே ஜெயலலிதா அவர்கள் இன்று தமிழக முதல்வராக இருக்கிறார் என்றால், அதற்கு முக்கியக் காரணம் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அவர் நெருக்கமாக இருந்தார் என்பதுதான். பெண் தெய்வங்களை நம் நாட்டில் எப்படி வழிபடுகின்றார்களோ, ஏறக்குறைய அதேமாதிரிதான் ஜெயலலிதா அவர்களை அ.தி.மு.க வினர் நடத்துகின்றனர். கட்சி வட்டாரத்தில் அவரை அம்மா என்றுதான் அழைக்கிறார்கள். யாரும் பெயர் சொல்லி அழைப்பதில்லை. அமைச்சர்களாக இருந்தாலும் M.L.A-வாக இருந்தாலும் எல்லோரும் அவர்முன் கைகட்டி தான் நிற்கிறார்கள். சாதாரண கட்சி தொண்டர்கள் அவர் பாதம் பணிந்து ஆசி பெறுகின்றனர். கட்சி பொதுக்கூட்டங்களில் தெய்வத்தை துதிப்பாடுவதுபோல் அம்மாவிற்கு புகழாரம் சூட்டுகிறார்கள். இதிலிருந்து நமக்கு என்ன புரிகிறது. இந்திய ஆண்கள் சாதாரண பெண்களைதான் அதிகாரம் செய்கிறார்களே தவிர பெண் என்பவள் அதிகாரத்திற்கு வந்துவிட்டால், அவளுக்கு பாதபூஜை செய்யவும் தயாராக உள்ளனர். ஆகவே பெண்ணை தெய்வமாக வழிபடும் கலாச்சாரம் நம் நாட்டில் இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதற்கேற்ற சரியான சந்தர்ப்ப சூழ்நிலைகள் அமைந்தால், அந்த கலாச்சாரம் வெளிப்படும் என்று நாம் புரிந்து கொள்ளலாம்..

5. **குடிப்பது உடல்நலனுக்குக் கெடுதி என்று ஒருபுறம் விளம்பரம் செய்யும் அரசு, மற்றொரு புறம் குடிப்பதற்கான விற்பனையை அனுமதிக்கிறது. இப்படி ஒருபக்கம் கண்டித்தும், மற்றொருபுறம் ஆதரித்தும் அரசு செயல்படுவது மிகவும் முரண்பாடாக உள்ளது. நாம் இதை எப்படி புரிந்துகொள்வது.**

இம்மாதிரியான முரண்பாடான விஷயங்கள் நம் நாட்டு கலாச்சாரத்தில் நிறையவே உள்ளன. ஜாதி விஷயத்தில் அரசின் அணுகுமுறையை எடுத்துகொண்டால், ஒரு பக்கம் ஜாதி பிரிவினைக் கூடாது என்கிறது. அதாவது நாட்டின் ஒற்றுமையை ஜாதி பிரிவுகள் சீர்குலைக்கும் என்று அரசாங்கம் கருதுவதாக தெரிகிறது. ஆனால் அதேசமயத்தில் பள்ளிகூட சேர்க்கை,

அரசு வேலை வாய்ப்பு என்ற விஷயங்களில் எல்லாம் ஜாதி சான்றிதழை கட்டாயமாக்கி உள்ளது. ஒரு மாணவனுக்கு சரியான ஜாதி சான்றிதழ் இல்லாமல் போனால், கல்லூரியில் அவனுக்கு இடமே கிடைக்காது என்ற நிலை வந்துவிட்டது. ஜாதி பிரிவினை நாட்டின் ஒற்றுமைக்கு எதிரி என்று பேசிவரும் அதே அரசாங்கம்தான் எல்லா தேவைகளுக்கும் ஜாதி சான்றிதழை வலியுறுத்துகிறது. இத்தகைய முரண்பாட்டை நம்மால் புரிந்துகொள்ள முடியுமா? இம்மாதிரியான முரண்பாடுகள் இன்னும் நிறையவே உள்ளன. உலக அரசியல் அரங்கங்களில் காந்திஜியின் அஹிம்சையும், சத்தியாகிரகத்தையும் வலியுறுத்தும் நமது அரசு பயங்கர நாசம் விளைவிக்கும் அணுகுண்டுகளை தயாரித்து வைத்துள்ளது. காந்திஜியின் அஹிம்சையும் அணுகுண்டும் எப்படி ஒத்துப்போகும் என்ற கேள்வி அரசாங்கத்திற்கு எழவில்லை. நம் நாட்டு அரசாங்கத்திற்கு அந்த கேள்வி எழவில்லை என்பதால், வெளிநாட்டு அரசிற்கு அந்த கேள்வி எழாமல் இருக்குமா? அரசியல்வாதிகள் ஒருவர் விடாமல் ஊழலை ஒழிக்க வேண்டும் என்றுதான் பேசுகிறார்கள். ஆனால் அதே அரசியல்வாதிகள்தான் தம் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி அரசாங்க ஊழியர்களை தவறு செய்ய சொல்கிறார்கள். எந்தவொரு அரசியல்வாதியாவது பணம் வாங்காமல், தவறான முறையில் சொத்து சேர்க்காமல், நாட்டு ம்க்களுக்கு சேவை செய்வதோடு தம்மை நிறுத்திக் கொண்டார்கள் என்றால், அவரை மற்ற அரசியல்வாதிகள் பிழைக்கத் தெரியாதவர் என்று கிண்டல செய்கிறார்கள். கல்வி இந்நாட்டு மக்களின் பிறப்புரிமை என்று அரசாங்கம் முழங்குகிறது. இந்நாட்டு மக்களின் பிறப்புரிமை கல்வி என்று சொல்லும்போது நமக்கெல்லாம் என்ன தோன்றுகிறது கல்வி குடிமக்களுக்கு இலவசமாகக் கிடைக்க வேண்டும் என்று அரசு விரும்புவதாகத் தோன்றுகிறது. ஆனால் அதேசமயத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள்  வாங்கும் capatation fees பற்றி அரசு எதுவும் செய்வதில்லை என்று பார்க்கும்போது இது மக்களுக்கு வியப்பாக உள்ளது. கல்வியின் அவசியத்தை வலியுறுத்தும் அரசு பள்ளிகளில்தான் கல்வியின் தரம் மிகவும் குறைவாக உள்ளது என்று புகார் எழுகிறது. ஆசிரியரும், சரி, மாணவரும் சரி எவரும் பள்ளிக்கு ஒழுங்காக வருவதில்லை. சில வகுப்புகளில் 4, 5 மாணவர்கள்தான் இருப்பார்கள். பள்ளிகளில் அடிப்படை வசதிகளே குறைந்து காணப்படுகின்றன என்றெல்லாம் புகார்கள் எழுந்தவண்ணமுள்ளன. கல்வியின் அவசியத்தை அரசாங்கம் வலியுறுத்தும் பொழுது நமக்கு என்ன தோன்றுகிறது கல்வியின் தரம் உயர்வதை அரசு வரவேற்கிறது என்று தோன்றுகிறது.  ஆனால் நடப்பது என்ன? எல்லா பள்ளிகளிலும் சென்டம் பாஸ் வாங்க வேண்டும் என்ற பெரிய மோகம் எழுந்துள்ளது. இதன் விளைவாக புரிகிறதோ, இல்லையோ பாடங்களை மனப்பாடம் செய்து கொண்டு மாணவர்கள் பரிட்சை எழுதுகிறார்கள். 500-க்கு 480 மார்க் ஒரு மாணவன் வாங்குகிறான் என்றால் அவன் பெரிய அறிவாளி என்று நமக்கு தோன்றுகிறது. ஆனால் அவனுக்கு சரியாக ஆங்கிலம்கூட பேசத் தெரியவில்லை. சரியாகக் கணக்குப்போட வரவில்லை என்பதை எல்லாம் பார்க்கும்பொழுது வெறும் மனப்பாடம் செய்துதான் மாணவன் இந்த மார்க்கை வாங்கியுள்ளான் என்று நாம் புரிந்து கொள்கிறோம்.

இந்தியா ஆன்மிகம் நிறைந்த நாடு என்று நாம் சொல்லிக் கொள்வதில் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். இப்படி ஆன்மிகம் நிறைந்த நாடு என்று கேள்விப்படுகின்ற வெளிநாட்டினர் அப்படிப்பட்ட் நாட்டைக் காண வேண்டும் என்று ஆர்வமாக வருகிறார்கள். ஆனால் அவர்கள் நம் நாட்டில் காணும் காட்சிகள் அவர்களை மிரண்டுபோக செய்கின்றன.அவர்கள் ஆன்மிகத்திற்கு நேரெதிரான அசுத்தம், ஏழ்மை, ஊழல், பொய் ஏமாற்று வேலை போன்றவற்றைத்தான் நம் நாட்டினரிடம் பார்க்கிறார்கள். இது அவர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை தருகிறது. இந்த முரண்பாடு விஷயமாக வெளிநாட்டவர் எழுப்பும் கேள்விகளை நம் நாட்டவர் எழுப்புவதில்லை. ஏனென்றால், இவையெல்லாம் நமக்கு பழகி போய்விட்டன. எப்படி சேற்றில் செந்தாமரை மலர்கிறதோ இப்படித்தான் இந்த ஏழ்மையிலும், அசுத்தத்திலும் ஆன்மிகம் மலர்ந்துள்ளது என்று நமக்கு நாமே சமாதானம் சொல்லிக் கொள்கிறோம்.

6. **அரசாங்கம் ஏழ்மை போக வேண்டும் என்று அறிவித்துள்ளது. ஆனால் அதேசமயத்தில் அந்த ஏழ்மையை அகற்றுவதற்காக ஏழை மக்களுக்கு இலவசங்களை அள்ளி வழங்குகிறது. இப்படி இலவசங்களை வழங்குவதில் நெடுங்காலக் கண்ணோட்டத்தில் ஏழ்மையை வளர்க்கும் என்ற அபாயம் உள்ளது. ஏழ்மையை அகற்ற விரும்பும் அரசு ஏழ்மையை வளர்க்கும் அணுகுமுறைகளை கையாள்வது முரண்பாடாக உள்ளது**.

நிலநடுக்கம், வெள்ளம், பஞ்சம் போன்ற பேரிடர்களை நாடு சந்திக்கும் பொழுது அந்த ஆபத்துகளிலிருந்து மக்களை காப்பாற்ற அரசாங்கம் தாராளமாக இலவசங்களை வழங்குவதுண்டு. அதாவது இலவச உணவு, மருத்துவ உதவி, ஆடைகள், தங்குமிடம் என்று இவற்றை எல்லாம் வழங்குவதுண்டு. ஆபத்து காலத்தில் இந்த உதவிகள் செய்வதை எவரும் தவறாக நினைப்பதில்லை. ஆனால் அந்த ஆபத்து விலகிய பின்னரும் இதையே தொடர்வது என்பது அறிவுக்கு பொருத்தமான செயல்பாடு இல்லை. குழந்தை பருவத்தில் தாயார் குழந்தைக்கு ஊட்டி விடுவாள். குளிப்பாட்டி விடுவாள், ஆடை அணிவித்து விடுவாள். பள்ளிக்கு தானே அழைத்துச் செல்வாள். இப்படி எல்லா உதவிகளையும் தானே முன்வந்து

செய்வாள். ஒரு குறிப்பிட்ட வயதுவரை இவ்வாறு செய்வது குழந்தைக்கு நல்லது. ஆனால் ஐந்து வயதிற்குமேல் நல்லதில்லை. பார்க்கின்ற மற்றவர்களும் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். இந்திய அரசு இப்படித்தான் குடிமக்களிடம் நடந்து கொள்கிறது.

இந்தியா விடுதலையான காலத்தில் நாடு பொருளாதார நிலையில் உண்மையிலேயே மிகவும் பின்தங்கிதான் இருந்தது. அப்பொழுது வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களை உயர்த்துவதற்கு அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகள் பொருத்தமாகத்தான் இருந்தன. அத்தகைய சலுகைகளை எல்லாம் ஒரு இருபது வருடத்தோடு நிறுத்தியிருக்கலாம். ஆனால் அரசாங்கம் இந்த இருபது வருடங்களுக்குமேல் நிறுத்தாமல் சுதந்திரம் அடைந்து 68 ஆண்டுகள் ஆகிய பின்னும் சலுகை ராஜ்ஜியத்தை தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. ஒருவர் நோயாளியாக இருக்கும் பொழுது கொடுக்கின்ற விசேஷ கவனத்தை அவர் குணம் அடைந்த பின்னும் எதிர்பார்த்தால், அதை தொடர்ந்து வழங்குவது அறிவுடைய செயல்பாடில்லை.

aஅமெரிக்கா அந்நாட்டிலுள்ள செவ்விந்தியர் மற்றும் நீக்ரோக்களை ஒரு காலத்தில் கொடுமைபடுத்தியதற்கு செய்யும் பரிகாரமாக அவர்களுக்கு எல்லாவிதமான இலவசங்களையும் வாரிவழங்கியது. அதன் விளைவு என்னவென்றால், Welfare allowance-ஆக மாதந்தோறும் கிடைக்கும் பணத்தை வைத்துக்கொண்டு அந்த செவ்விந்தியர்களும், நீக்ரோக்களும் ஜாலியாக குடித்துவிட்டு வேலைக்கே செல்லாமல் வீணே பொழுதைக் கழிக்கின்றனர். குற்றவாளிகளாக கைது செய்யப்படுபவர்கள் யார் அதிகம் என்று பார்த்தால், இப்படி வேலை செய்யாமல் கிடைக்கும் allowance குடியில் செலவழிப்பவர்கள் தான் அதிகம் என்று தெரிகிறது. இவர்களுக்குக் கொடுக்கும் allowance-யை நிறுத்தினால், பெரிய அளவில் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். தொடர்ந்து வழங்கிக் கொண்டிருந்தால், நாட்டில் இவர்கள் செய்யும் அராஜகம் அதிகமாகிறது. இப்படி கொடுக்கவும் முடியாமல், நிறுத்தவும் முடியாமல் ஏன் இந்த தலைவலியை வரவழைத்துக் கொண்டோம் என்று தெரியாமல், அமெரிக்க அரசு ஸ்தம்பித்து நிற்கிறது. இலவசங்களை கொடுப்பதை பொறுத்த மட்டில் அரசு தான் பெருந்தன்மையாக இருப்பதாக நினைக்கலாம். ஆனால் நடைமுறையில் இலவசமாகப் பெறுவது எல்லாம் விரயமாகிதான் போகிறது. குடிசை மாற்று வாரியத்தை எடுத்துக் கொள்ளுங்கள். வீடில்லாதவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் நோக்கத்தோடுதான் இந்த வீடுகள் கட்டப்பட்டன. ஆனால் ஒதுக்கப்பட்ட வீடுகளில் உள்ளவர்கள் பெரும்பாலோர் வாடகைக்கு விட்டுவிட்டு, அவர்களில் பெரும்பாலோர் முன்பிருந்த இடத்திலேயே வாழ்கின்றனர். ஏழை மக்களுக்கு வருடம்தோறும் வேலைக் கிடைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் அரசாங்கம் மாகாத்மாகாந்தி ஊரக வளர்ச்சி திட்டம் என்று ஒன்றை தொடங்கியது. அதன் விளைவு என்னவாயிற்று. விவசாயத்திற்கு ஆட்களே கிடைப்பதில்லை என்ற நிலை உருவாயிற்று. ஊரக வளர்ச்சி திட்டத்தில் வேலைக்கு செல்பவர்கள் அந்த வேலையை ஒழுங்காக செய்வதுமில்லை. பெயரைக் கொடுத்துவிட்டு மரியாதைக்காக இரண்டு மூன்று மணி நேரம் வேலை செய்துவிட்டு வீட்டிற்கு வந்துவிடுகின்றனர். இவர்களுக்கு கிடைக்கும் சம்பளத்தில் 15 ரூ முதல் 20வரை இந்த வேலையை இவர்களுக்கு கொடுப்பதற்காக உள்ள ஊராட்சி தலைவர்களும் எடுத்துக் கொள்கிறார்கள். கூலி தொழிலாளிகள் வேலைக்கு வர மறுப்பதால், அதிக கூலி கொடுத்து ஆட்களை அழைக்க வேண்டியதாயிற்று. இதன் நேரடி விளைவு விவசாயிகள் அவர்கள் பயிரிடும் காய்கறிகளின் விலையை உயர்த்திவிடுகிறார்கள். இதைவிட மோசம் என்ன வென்றால் விவசாயமே செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு விலை நிலங்களை எல்லாம் பிளாட் போட்டு மனைகளாக விற்றுக்கொண்டு உள்ளனர். புதுவை கடலூர் நெடுஞ்சாலை 15, 20 வருடங்களுக்குமுன் பச்சைபசேல் என்று நெல் வயல்களாக காட்சியளிக்கும். இப்போது அதே நெல் வயல்கள் எல்லாம் பிளாட்டுகளாக மாறி விற்பனைக்கு காத்திருக்கின்றன. இந்த நிலை எப்படி வந்தது என்று பார்த்தால், விவசாயிகள் பின்வருமாறுதான் கூறுகிறார்கள். ஊரக வளர்ச்சி திட்டத்தால் நாங்கள் கொடுக்கும் வேலைக்கு ஆட்கள் வருவதில்லை. அப்படியே வந்தாலும் தினக்கூலியை அதிக அளவில் கேட்கின்றனர். மதியம் 12 மணிக்குமேல் எவரும் வேலை செய்ய மறுக்கிறார்கள. மதியம்வரை செய்யும் வேலைக்கே 350/-, 400/- ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது. இப்படி அதிக கூலி கொடுத்து செய்யும் விவசாயத்தில் லாபம் அதிகம் பார்க்க முடிவதில்லை. இந்த நிலையில் மனையாக மாற்றிவிட்டால் நல்ல லாபம் கிடைக்கும் என்று தெரியும்போது நாங்கள் பேசாமல் அதற்கு மாறிவிட்டோம் என்று கூறுகிறார்கள். அரசு செய்யும் அடுத்த பெரிய தவறு விவசாயத்திற்கு இலவசமாக மின்சாரம் தருவது. மின்சாரம் இலவசமாக கிடைக்கிறது என்று அறிந்தவுடன் ஆளுக்குஆள் பம்ப் செட் போட்டு நீரை இறைக்க ஆரம்பித்து விட்டனர். இதன் விளைவு என்ன்வென்றால், நிலத்தடி நீர் கணிசமாக குறைந்து விட்டது. 30, 40, அடிகளில் கிடைத்த நீர் இப்போது 110, 120 அடி ஆழத்திற்கு போய்விட்டது. கடலோர மாவட்டங்களில் நிலத்தடி நீர் குறையும்போது அதை ஈடு செய்யும் வகையில் கடல்நீர் நிலத்தடி நீர் உள்ள இடத்தில் எல்லாம் புக ஆரம்பித்துவிடுகிறது. இதனால, விவசாயத்திற்கு இறைக்கும் நீரெல்லாம் உப்பு கரிக்கிறது. இது ஒருபுறமிருக்க மின் விநியோகம் இலவசமாகிவிட்டதால், மின் உற்பத்தியை பெருக்கவோ, மின் விநியோகத்தை அதிகரிக்கவோ தேவையான முதலீடே கிடைக்காமல், அரசு கண்டு கொள்ளாமல்

உள்ளது. இதன் நேரடி விளைவு மின் தேவை அதிகமாகி மின் உற்பத்தி குறைந்து ஒவ்வொரு வருடமும் தமிழகம் மின்பற்றாகுறையால மிகவும் அவதிப்பட்டு வருகிறது.

ஆனால் இதற்கு நேரெதிரான நிலைமை குஜராத் மாநிலத்தில் நிலவுகிறது. அங்கே எதுவுமே இலவசமில்லை. எதுவாக இருந்தாலும் விலை கொடுத்துதான் வாங்க வேண்டும். 15 வருடங்களுக்குமுன் தொழில் நிமித்தமாக குஜராத்திற்கு ஒரு அன்பர் சென்றிருந்தார். விவசாயிகள் எல்லாம் foreign model கார்கள் வைத்திருப்பதை கண்டு அசந்துப் போனார். 10, 15 ஏக்கர் வைத்துள்ள விவசாயிகள் எல்லாம். 40, 50 லட்சம் பெறுமானமுள்ள கார்களை வைத்துள்ளனரே இது எப்படி என்று ஆச்சரியப்பட்டார். தமிழத்தில் foreign model கார்கள் எல்லாம் அரிதாகத்தான் கண்ணில்படும். ஷோ ரூமிற்கே ஒரு நாளைக்கு எழு, எட்டு பேர்கள்தான் கஸ்டமர்கள் வருவார்கள். பெரும் பண்ணையார்கள் foreign model கார் வைத்திருந்தால் அதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இடைநிலை விவசாயிகளே சர்வ சாதாரணமாக foreign model கார்களை வைத்துள்ளனர். இவையெல்லாம் கவனித்த அந்த அன்பர் அரசு எதையுமே இலவசமாகக் கொடுக்க மறுப்பதால், விவசாயிகள் சொந்த உழைப்பையே நம்பி செயல்படுவதால், இந்தளவிற்கு சுபிட்சம் அடைந்துள்ளார்கள் என்று புரிந்து கொண்டார். இதையெல்லாம் வைத்துப்பார்க்கும்போது நெடுங்காலக் கண்ணோட்டத்தில் இலவசங்கள் நாட்டின் சுபிட்சத்தைக் கெடுக்கும் என்று புரிந்துகொண்டு அரசாங்கமும் சரி, மக்களும் சரி இலவசங்களிலிருந்து விடுதலைப் பெறுவது நல்லது என்று புரிந்து கொள்ள வேண்டும்.

7. **இந்திய அரசாங்கம் உலகத்தில் மற்ற நாடுகளிலுள்ள அநீதி இழைக்கப்பட்ட செவ்விந்தியர்கள், நீக்ரோக்கள், பாலஸ்தீனியர்கள் போன்ற இவர்கள் பேர்களில் எல்லாம் மிகுந்த கருணை காட்டி வருகிறது. ஆனால், இந்திராகாந்தி அம்மையார் படுகொலைக்குப்பின் நடந்த இனக் கலவரத்தில் ஏராளமான சீக்கியர்கள் கொலை செய்ப்பட்டனர். அந்த இனக் கலவரத்தைத் தூண்டிய காங்கிரஸ் கட்சி தலைவர்களை எல்லாம் கண்டிப்பதில் அக்கறைக் கட்டாமல் நாள் கடத்தி வருகிறது. வெளிநாட்டிலுள்ள அநீதி இழைக்கப்பட்ட சிறுபான்மையினர்மீது அக்கறைக் காட்டிய அரசு உள்நாட்டிலேயே நியாயம் கேட்டுப் போராடும் சீக்கிய சிறுபான்மையினர் விஷயத்தில் அக்கறைக் காட்டாதது முரண்பாடாக உள்ளது.**

இந்த முரண்பாடு மிகவும் sensitive-ஆன விஷயம் ஆகும். மேற்பார்வையாகப் பார்த்தால், தவறு செய்தவர்களுடைய community-யை சேர்ந்த மற்றவர்களை எல்லாம் தண்டிப்பது என்பது ஒரு தவறான செயலாகப்படுகிறது. ஆனால் மனித சுபாவத்தை எடுத்துக்கொண்டால், இப்படி மனிதன் நடந்து கொள்வது மிகவும் சகஜம் எனத் தெரியவருகிறது. 2000 ஆண்டுகளுக்குமுன் யூத இனத்தைச் சேர்ந்தவர்கள் ஏசுபிரானமீது குற்றம் சார்த்தி சிலுவையில் அறைந்தார்கள். இந்த தவற்றை செய்த குறிப்பிட்ட 4, 5 யூதர்களை மட்டும். கிருஸ்துவ சமுதாயம் தண்டிக்கவில்லை. அடுத்த 2000 வருடங்களுக்கு யூதர் இனத்தையே கிருஸ்துவ சமுதாயம் தள்ளிவைத்து கொடுமைப்படுத்தியது. ஐரோப்பிய நகரங்களில் ஊரின் ஒதுக்குப்புறமாக அவர்கள் வாழ நிர்பந்திக்கப்பட்டனர். திடீர் திடீரென்று யூதர்களின் குடியிருப்புகளின் மீது தாக்குதல் நடத்துவார்கள். வீடுகளைக் கொளுத்துவார்களா. சொத்து மற்றும் உடமைகளை சூறையாடுவார்கள். இப்படிபட்ட அநீதிகளை இழைப்பவர்களை அரசாங்கம் கண்டு கொள்ளாது. அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனையும் வழங்காது. இப்படிப்பட்ட கொடுமைகள் 2000 ஆண்டுகள் நிகழ்ந்தன என்றால், நம்மால் நம்ப முடிகிறதா? ஆனால் இதுதான் உண்மை. ஒரு சமுகத்தை சேர்ந்த ஒரு சிலர் தவறு செய்யும் பொழுது அந்த சமுகமே சரியில்லை என்று முத்திரைக் குத்தப்பட்டு ஒதுக்கி வைக்கபடுவதைப் பார்க்கலாம். ஒரு குடும்பத்தில் பெரிய பிள்ளை தவறு செய்து ஜெயிலுக்குப் போகிறான் என்று வைத்துக் கொள்வோம். அந்த தனிப்பட்ட நபர் செய்கின்ற தவறின் பலனாக ஒட்டுமொத்த குடும்பமும் சமூகத்தின் ஏளனத்திற்கு ஆளாவதைப் பார்க்கலாம். அண்ணன் ஜெயிலில் இருப்பது தெரிந்தால், தம்பிக்கு வேலைக் கிடைப்பதே கடினம். சம்பந்தம் பேச வருகின்றவர்களும் பெரியபிள்ளை ஜெயிலுக்குப் போனவர் என்று தெரிந்தால், மேற்கொண்டு சம்பந்தப்பேச்சை பேசத் தயங்குவார். எத்தனையோ குடும்பங்களில் மூத்தவள் ஓடிப்போய் திருமணம் செய்து கொண்டாள் என்றால், அவளுடைய தங்கைகளுக்கு வரன் கிடைப்பது அரிதாகிவிடுகிறது. காரணம் கேட்டால் அக்கா மாதிரித்தான் தங்கையும் இருப்பாள். வம்பை ஏன் விலை கொடுத்து வாங்க வேண்டும் என்பார்கள். P & P கதையில் இம்மாதிரி ஒரு சூழ்நிலை உருவாவதைப் பார்க்கிறோம். லிடியா விக்காமுடன் ஓடிப்போனபின் மற்ற நான்கு பெண்களுக்கும் திருமணம் நடக்குமா என்று பென்னட் தம்பதியினர் அஞ்சுகிறார்கள்.

சமீக காலமாக இஸ்லாமிய நாடுகளில் பயங்கரவாதம் தலையெடுத்துள்ளது. சிறை பிடிக்கப்பட்ட பயங்கரவாதிகளை விசாரிக்கும்போது, அவர்கள் எல்லாம் இஸ்லாமியர்கள் என்று விசாரணையில் தெரிகிறது. ஆனால் நாட்டில் நடப்பது என்ன? பெரும்பாலான திவிரவாதிகள் இஸ்லாமியர்களாக இருப்பதால், ஒட்டு மொத்தமாக முகமதியர்கள எல்லோருமே தீவிரவாதிகள் என்று முத்திரைக் குத்தபட்டுள்ளார்கள்.முகமதியர் ஒருவர் அமெரிக்கா செல்ல விரும்புகிறார் என்றால்,

அவருக்கு வீசா கிடைப்பது அரிதாகிவிட்டது. அப்படியே கிடைத்து அவர் அமெரிக்கா சென்று விட்டாலும் விமான நிலையத்தில் immigration அதிகாரிகள் அவர்களை பல்வேறு சோதனைக்கு ஆளாக்குகிறார்கள். சோதனைகள் எல்லாம் முடிந்து அவர்கள் வெளியே வருவதற்கு இரண்டு மணிநேரத்திற்குமேல் ஆகிவிடுகிறது. நாம் இதை வைத்துப்பார்க்கும்போது என்ன புரிந்து கொள்கிறோம். ஒரு நாட்டின் குடிமகன்கள் ஒரு சிலர் தவறு செய்யும் பொழுது அத்தவறு அந்நாட்டை சேர்ந்தவர்கள் அனைவரையும் பாதிக்கிறது என்று தெரிய வருகிறது. இம்மாதிரி நிலையில்தான் நாம் சீக்கியர்களை வைத்துப் பார்க்க வேண்டும்.

1947-ஆம் ஆண்டு நாடு இந்தியா பாகிஸ்தான் என்று இரண்டாக உடைந்த பொழுது சீக்கியர்கள் குடியிருந்த பஞ்சாப் மாநிலம் இந்தியாவுடன் இணைவதாக பரவலாக ஒத்துக் கொள்ளப்பட்டு அவ்வாறே நிகழ்ந்தது. அதாவது சீக்கியர்கள் இந்துக்களோடு உணர்ந்த ஒரு ஒற்றுமையை முகம்மதியர்களுடன் உணரவில்லை. அதனாலேயே பாகிஸ்தானுடன் சேர்வதைவிட, இந்தியாவுடன் சேர்வதுமேல் என்ற முடிவுக்கு வந்தார்கள். இந்த ஒற்றுமை உணர்வு கிட்டத்தட்ட 1980-வரை நீடித்தது. 65-75 வரை பசுமை புரட்சி பஞ்சாப்பில் அமோக வெற்றி பெற்று சீக்கிய விவசாயிகள் பெரும் சுபீட்சத்தை அடைந்தார்கள். பணம் ஒருவரிடம் அதிகமாக சேர்ந்தால் எப்பொழுதுமே அவர்களுக்கு ஆணவமும், அதிகாரமும் தலையெடுக்கும். அது மட்டுமின்றி இத்தனை நாள்வரை பழகிக் கொண்டிருந்த மற்றவர்களிடமிருந்து தனித்து விலகிப் போகவும் பிரியப்படுவார்கள். ஏழை உறவினர்களின் மத்தியில் திடீரென ஒரு குடும்பத்திற்கு மட்டும் சுபீட்சம் கிடைத்துவிட்டால், முதல் வேலையாக அந்தக் குடும்பம் மற்ற ஏழை உறவினர் குடும்பங்களிலிருந்து தள்ளி நிற்க பிரியப்படுவார்கள். அவர்களைப்போய் பார்ப்பதை நிறுத்தி விடுவார்கள். இப்படிப்பட்ட பிரிவினை உணர்வுதான் சுபீட்சம் வந்த பிறகு சீக்கிய சுமுதாயத்தினரிடம் தலை தூக்கியது. இந்தப் பிரிந்து போக வேண்டும் என்ற உணர்வை மேலும் தீவிரமாக்கி அதை official-ஆக ஒரு அரசியல் கொள்கையாக மாற்றி அதை அமுல்படுத்த சீக்கிய தீவிரவாதிகள் தோன்ற ஆரம்பித்தார்கள்.

இப்படிப்பட்ட பிரிவினை வாதத்தை அரசு ஏற்கவில்லை. தீவிரவாதிகளின் வன்முறை செயல்களை கண்டிக்க ஆரம்பித்தது. அரசின் பதில் தாக்குதலுக்கு ஆளாகியவுடன் எங்கே புகலிடம் தேடிக் கொண்டால் போலீஸும், ராணுவமும் உள்ளே வராதோ அப்படிப்பட்ட புகலிடத்தை சீக்கியர்கள் தேடினார்கள். அப்படிப்பட்ட ஒரு நல்ல புகலிடமாக சீக்கியர்களுடைய பொற்கோயில் அமைந்தது. ஆகவே பொற்கோயிலை தலைமையகமாக வைத்துக் கொண்டு சீக்கிய தீவிரவாதிகள் செயல்பட ஆரம்பித்தார்கள். கோயில் என்பது ஆண்டவனை வழிப்படக் கூடிய புனித ஸ்தலமாகும். அப்படிப்பட்ட புனித ஸ்தலத்தை மையமாக வைத்து தீவிரவாத தாக்குதல் நடத்துவது என்பது பெரிய குற்றமாகும். இத்தகைய மகாபாதகத்தை தீவிரவாதிகள் பொற்கோயிலை மையமாக வைத்து செய்து கொண்டிருந்ததை கோயில் நிர்வாகமோ அல்லது அங்கு வழிபாட்டிற்கு வரும் பொதுமக்களோ கண்டித்ததாகவே தெரியவில்லை. ஒரு தவறு நடக்கும் பொழுது பொதுமக்கள் அதை கண்டிக்கவில்லை என்றால், அந்த தவறுக்கு பொதுமக்கள் உடந்தை என்று தான் நாம் சொல்ல வேண்டும். பாக்கிஸ்தான் இந்தியாமேல் 3 முறை தாக்குதல் நடத்தியிருக்கிறது என்றால் அத்தகைய தாக்குதல் பாக்கிஸ்தானிய பொதுமக்கள் ஆதரவின்றி நடந்திருக்கவே முடியாது.

ஜெர்மனியை எடுத்துக் கொள்ளுங்கள். நாட்சிய ஜெர்மனி, ரஷ்யாவை தாக்கிய பொழுது அது செய்த அக்கிரமங்களுக்கு அளவே இல்லை. கிராமங்களுக்கு தீயிட்டு கொளுத்தியது. பாலங்களை இடித்து தகர்த்தது. ஜெர்மானிய வீரர்கள் தங்கள் கையில் கிடைத்த பெண்களுடைய கற்பை எல்லாம் சூறையாடினார்கள். ஒரு கட்டத்தில் ரஷ்ய வீரர்களின் கை ஓங்கிய பொழுது அவர்கள் ஜெர்மனிக்குள் புகுந்தனர். ஜெர்மன் ராணுவம் என்ன அக்கிரமங்களை எல்லாம் செய்ததோ அந்த அக்கிரமங்களை எல்லாம் ஒன்று விடாமல் இவர்களும் செய்தார்கள். ரஷ்ய பெண்களின் கற்பை ஜெர்மானிய வீரர்கள் சூரையாடியிருக்கும் பொழுது ஜெர்மானிய பெண்களின் கற்பை ரஷ்ய வீரர்கள் சூறையாடுவது மட்டும் தவறு என்று எப்படி சொல்ல முடியும். ஜெர்மானிய குடிமக்களுடைய ஆதரவு இல்லாமல் ஜெர்மானிய ராணுவம் ரஷ்யாவின்மேல் படை எடுத்திருக்க முடியாது. அப்படி என்றால் ஜெர்மன் ராணுவம் ரஷ்யாவில் செய்த அக்கிரமங்களுக்கெல்லாம் ஜெர்மன் குடிமக்களும் ஒரு வகையில் காரணம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இதேரீதியில் பார்த்தால் சீக்கிய குடிமக்களின் ஆதரவு இல்லாமல் இத்தனை வருடங்களாக சீக்கிய தீவிரவாதிகளால் செயல்பட்டிருக்க முடியாது. தீவிரவாதிகள் ஆயுதங்களை வாங்கி குவிக்கிறார்கள் என்றால் அதற்கான பணத்தை சீக்கிய குடிமக்கள்தானே கொடுத்திருப்பார்கள். இலங்கையில் L. T. T. இயக்கத்தினர் இலங்கை தமிழர்களுடைய ஆதரவு இல்லாமல் செயல்பட்டிருக்க முடியுமா? L. T. T. இயக்கத்திற்கான நிதி உதவி எல்லாம் இலங்கை தமிழர்கள் தானே கொடுத்திருப்பார்கள். அப்படியிருக்கும் பொழுது L. T. T. -ஐ தாக்குகின்ற இலங்கை ராணுவம் இலங்கை தமிழர்களையும் அநியாயமாக துன்புறுத்துகிறது என்று நாம் சொல்ல முடியுமா? ராணுவ நடவடிக்கைகள் என்று வந்து விட்டாலே நியாய

தர்மங்களை பார்ப்பது கடினம். ராணுவம் வரம்புமீறி செயல்படுவது மிகவும் சகஜம். பாக்கிஸ்தானிய ராணுவம் வங்க தேசத்தில் வங்காளி குடிமக்களை அப்படி கொடுமை செய்து இம்சித்தது.

இதை எல்லாம் வைத்துப்பார்க்கும்போது நாட்டின் பிரதமரை கொலை செய்வது என்பது தேச துரோகக் குற்றமாகும். அத்தகைய மகா பாதகத்தைக் கண்டு கொதித்தெழும் மக்கள் குற்றம் செய்த இந்த சமூகத்தைப் பரவலாக தாக்குவது என்பது உணர்ச்சிவயப்பட்ட அந்த நேரத்தில் செய்யக் கூடிய ஒரு இயல்பான செயல்பாடுதான். ஆனால் அரசாங்கம் இத்தகைய படுகொலையை ஆதரிக்கவில்லை. ஏனென்றால் இந்திரா அவர்களுக்குப்பின் பதவியேற்ற ராஜீவ் அவர்கள் இந்த இனப்படுகொலையை உடனே நிறுத்தும்படி கேட்டுக் கொண்டார். இந்த படுகொலை என் தாயாரின் ஆன்மாவை கடுமையாகப் பாதிக்கும். ஆகவே இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று அறிக்கை விடுத்தார். அப்படி செய்தது அவருடைய பெருந்தன்மையை காட்டுகிறது. அவருக்கு இருந்த பெருந்தன்மை அவருடைய காங்கிரஸ் கட்சிக்கு இல்லை எனபதில் ஆச்சரியமில்லை. அதனால் இந்த படுகொலையை நிகழ்த்திய காங்கிரஸ் தலைவர்களையும், தொண்டர்களையும் நீதிமன்றத்தில் வைத்து தண்டிப்பதில் பெரியதாக ஒன்றும் ஆர்வம் காட்டாமல் போனதிலும் ஆச்சரியமுமில்லை.

மூலம் : ஸ்ரீ கர்மயோகி
விரிவாக்கம் மற்றும் சொற்பொழிவு: திரு.N.அசோகன்
சொற்பொழிவாற்றிய தேதி : 15.08.15

***********